1974 ஏப்ரல் 4]

Drug Testing Laboratory.

* 746 *Q.*—THIRU N. DENNIS :

* 745 *Q.*—THIRU N. K. PALANISAMY :

THIRU P. SOUNDARAPANDIAN : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) the steps taken by the Government to set up a Drug Testing Laboratory in this State; and

(*b*) the details of the financial commitments for this project?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) மருந்துச் சோதனை ஆய்வுக் கூடம் ஒன்றைக் கட்டுவதற்காக அரசு ரூ. 1 லட்சம் அனுமதி வழங்கியுள்ளது. இந்த ஆய்வுக் கூடத்திற்கு தேவையான கருவிகளை வாங்குவதற்காக மேலும் ரூ. 1 லட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆய்வுக் கூடத்திற்குத் தேவையான கட்டிடங்கள், பணியாளர்கள், கருவிகள் ஆகிய வற்றிற்கான கூடுதல் செலவிற்கு ஒப்பளிப்பு வழங்கும் செயற்குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இது எங்கே கட்டப்படும், எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, சென்னையிலே உள்ள நலத்துறை இயக்குநர் அலுவலக வளாகத்தினுள் இது கட்டப்பட வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. ஒரு லட்சம் ரூபாய் அளவிலே 'பைல் ஃபௌண்டேஷன்' போடவேண்டுமென்றும், ஒரு தளம் கட்ட 5 லட்சம் ரூபாய் தேவை என்றும் கூறப்பட்டதால் அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

Maternity Centres.

* 747 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state whether 'Ayahs' have been appointed in Maternity Centres and Sub Centres?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : 2,348 ஆயாக்கள் தாய்சேய் நல மற்றும் துணை விடுதிகளில் பணி செய்ய நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. என். டென்னிஸ் : இப்போது பஞ்சாயத்து யூனியன்களிலே இருக்கின்ற சில சப்-சென்டர்களில் ஆயாக்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் ; சில சப்-சென்டர்களில் ஆயாக்கள் நியமிக்கப்படவில்லை. எல்லா சப்-சென்டர்களிலும் ஆயாக்களை நியமிக்க வேண்டுமென்று சொல்லி, அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஒன்றியம் என்பதும் ஒரு பொறுப்புள்ள சமூக அமைப்புதான். தமிழகத்தில் மொத்தம் 2,603 துணை விடுதிகள் இருக்கின்றன. அதில் 2,348 துணை விடுதிகளில் ஆயாக்கள் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். மிச்சமுள்ள இடங்களிலும் அந்தத் தாய்மார்கள் பணி யாற்ற, ஏற்படுகின்ற செலவில் 2/3 பங்கை அரசாங்கம் கொடுத்தும், 1/3 பங்கை ஒன்றியம் ஏற்றுக்கொள்ள முன்வராததால் நியமிக்கப்படவில்லை. ஆகவே மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்கள் ஒன்றியத்திற்கு இந்தத் தன்மையை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Leprosy Survey Project.

* 748 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether any financial assistance from the City Council of Munich (West Germany) has been received for the leprosy survey project in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, மாநில அரசு இத்தகைய ஸ்தாப னங்களை உதவி கேட்டு அணுகியதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, கேள்வி போட்ட தன்மையின் காரணமாக விடை மறுப்பாக வந்தது. தமிழக அரசுக்கு அவர்கள் நேரடியாக உதவவில்லை என்பது விடையினால் பெறப்பட்டது. ஆனால் இந்த மேற்கு ஜெர்மனியைப் பொறுத்தவரையில் இங்கே சில அமைப்புகளை அவர்களாகவே ஏற்படுத்தி, அதன் மூலம் தொழுநோய் தடுப்புப் பணிகளை செய்து வருகிறார்கள். அப்படிப்பட்ட அமைப்பு வடசென்னை பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்கள் அல்லது குடிசைப் பகுதிகளில் வாழும் மக்கள் அதிக மாக உள்ள இடங்களில் தொழுநோய் தோன்றுகின்ற கட்டத்திலேயே அறிந்து அவர்களுக்கு சிகிச்சை செய்கின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. மாநில அரசு நேரடியாக அவர்களை உதவி கேட்டு அணுக முடியாது. மத்திய அரசின் அனுமதி அதற்கு வேண்டும். அதனால் நாம் அணுகவில்லை. சோஷியல் சர்வீஸ் என்ற முறையில் அவர்களாகவே முன்வந்து தொழுநோய் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு, பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.